சேலம்

"கம்யூனிஸ்டுகளையே காணோம்னு சொன்னீங்க":

# எடப்பாடி விரிப்பது ரத்தினக் கம்பளம் அல்ல; வஞ்சக வலை!

## சி.பி.எம். பதிலடி!!

சென்னை,ஜூலை.17

கடந்த வாரத்தில் தமிழ்நாட்டில் கம்யூனிஸ்டுகளையே காணோம் என்ற எடப்பாடி பழனிசாமி, இந்த வாரத்தில் கூட்டணிக்கு அழைத்திருப்பதாக சிபிஎம் மாநிலச்செயலாளர் சண்முகம் விமர்சித்துள்ளார். கம்யூனிஸ்டுகளுக்கு அவர் விரிப்பது ரத்தினக் கம்பளம் அல்ல; வஞ்சக வலை என்று கூறியுள்ளார்.

தமிழ்நாட்டில் சட்டமன்றத் தேர்தல் நெருங்கிவிட்ட நிலையில், அனைத்து கட்சிகளும் தேர்தல் பணிகளை தீவிரமாக்கிவிட்டன. அந்த வகையில் அதிமுக மற்றும் பாஜக கட்சிகள் கூட்டணி அமைத்துள்ளன. இந்த கூட்டணியில் இன்னும் சில கட்சிகள் வரும் காலங்களில் இணையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதனிடையே திமுக கூட்டணியில் உள்ள கட்சிகளுக்கு அதிமுக மற்றும் பாஜக அழைப்பு விடுத்து வருகின்றன. இந்த நிலையில் எடப்பாடி பழனிசாமி சிதம்பரத்தில் பேசுகையில், "விழுப்புரத்தில் கம்யூனிஸ்டு கட்சியின் மாநாட்டிற்கு அனுமதி அளிக்கப்படவில்லை.. திருச்சியில் விசிக மாநாட்டிற்கு அனுமதி கொடுக்க மறுக்கிறார்கள்.. விசிகவின் கொடிக்கம்பம் நடுவதைத் தடுக்கிறார்கள். இவ்வளவு அசிங்கப்பட்டுமா அந்த கூட்டணியில் ஏன் இருக்க வேண்டும்?

இவ்வளவு அசிங்கப்பட்டும் திமுக உடனான கூட்டணியில் தொடர வேண்டுமா? சிந்தித்து பாருங்கள்.. அதிமுகவைப் பொறுத்தவரை எங்கள் கூட்டணியில் சேரும் கட்சிகளுக்கு ரத்தினக் கம்பளம் விரித்து வரவேற்போம். கூட்டணி என்பது சூழ்நிலைக்கு தக்கவாறு அமைப்பது", என்று தெரிவித்தார். இதன் மூலமாக எடப்பாடி பழனிசாமி சிபிஎம், சிபிஐ மற்றும் விசிக உள்ளிட்ட கட்சிகளுக்கு கூட்டணிக்கான அழைப்பை விடுத்துள்ளார் என்று புரிந்து கொள்ள முடிகிறது.

இதற்கு சிபிஎம் மாநிலச் செயலாளர் சண்முகம் கடுமையான பதிலடியை கொடுத்துள்ளார். "எடப்பாடி பழனிசாமி அவர்கள் காலையில் ஒரு பேச்சு; அதற்கு நேர் மாறாக மாலையில் ஒரு பேச்சு. நாடாளுமன்ற தேர்தலில் ஒரு பேச்சு அதற்கு நேர்மாறாக இப்போது பிஜேபியோடு கூட்டணி. போன வாரம் கம்யூனிஸ்ட்களையே காணோம் என்றார்; இந்த வாரம் அழைக்கிறார். கம்யூனிஸ்டுகளுக்கு அவர் விரிப்பது ரத்தினக் கம்பளம் அல்ல; வஞ்சக வலை. இதை நாங்கள் அறிந்தே வைத்துள்ளோம். ஆர்எஸ்எஸ் எனும் புதை குழிக்குள் விழுந்து வெளியேற முடியாமல் சிக்கிக் கொண்டிருப்பது அதிமுக தான்", என்று பதிலளித்துள்ளார். இதனால் எடப்பாடி பழனிசாமியின் அழைப்பை சிபிஎம் நிராகரித்துவிட்டதாக பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில், தி.மு.க. கூட்டணியில் குழப்பத்தை ஏற்படுத்தவே எடப்பாடி பழனிசாமி அழைக்கிறார் என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல்.திருமாவளவன் கூறினார். மேலும் அவர் கூறுகையில், அ.தி.மு.க. கூட்டணியில் இணைவதற்கு யாரும் தயாராக இல்லை என்ற சூழ்நிலையில், தி.மு.க. கூட்டணியில் இருந்து எங்கள் கூட்டணிக்கு வாருங்கள் என எடப்பாடி பழனிசாமி சொல்லுவது அவர் கருத்தாக இல்லை, யாரோ சொல்வதை திருப்பி கூறுகிறார். நிறைவேறாது என தெரிந்தும் திரும்பத்திரும்ப அழைப்பது வேடிக்கையாக உள்ளது என்றார்.

உள்ளாட்சிகளில்

# மாற்றுத்திறனாளிகளுக்கு நியமனப்பதவி!

## விண்ணப்பிக்க இன்று கடைசி நாள்!!

சென்னை, ஜூலை.17–

உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத் திறனாளிகளை உறுப்பினர்களாக நியமிக்கும் விண்ணப்ப நடைமுறைக்கு வியாழக்கிழமை (ஜூலை 17) கடைசி நாள்.

சென்னை உள்பட ஒரு சில மாநகராட்சிகளில் 70 பேர் வரை நியமனப் பதவிக் . கு விண்ணப்பித்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ... [illegible] ... னம் செய்யப்படவுள்ளனர். இதற்காக விண்ணப்ப விநியோகம் கடந்த 1ஆம் தேதி தொடங்கியது. விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து சம்பந்தப்பட்ட உள்ளாட்சிகளில் அளிப்பதற்கான கடைசி தேதி ஜூலை 17 என அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், விண்ணப்ப நடைமுறை வியாழக்கிழமையுடன் (ஜூலை 17) நிறைவடைகிறது. [illegible] வருகின்றனர். சென்னை மாநகராட்சியில் மட்டும் நியமனப் பதவிக்காக சுமார் 70 பேர் வரை விண்ணப்பம் செய்துள்ளனர்.

இதுகுறித்து, மாற்றுத் திறனாளிகள் அமைப்பைச் சேர்ந்த நிர்வாகிகள் கூறுகையில், உள்ளாட்சி அமைப்புகளில் நியமனப் பதவிக்கு விண்ணப்பிக்க ஜூலை 17ஆம் தேதி கடைசி என அறிவிக்கப்பட்டிருந்தது.



நீலகிரி மாவட்ட ஆட்சியர் கூடுதல் அலுவலகத்தில், தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்தலைவர் புதுக்கோட்டை விஜியா தலைமையில், உறுப்பினர்கள் டாக்டர்.காஸ்மீர்ராஜ், ஸ்ரீ காவ்யா நாகராஜன் ஆகியோர் முன்னிலையில், துறை சார்ந்த அலுவலர்களுடன் குழந்தை உரிமைகள் பாதுகாப்பு குறித்த கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது.

# மருத்துவமனைக்கு செல்லும் வழியில் கோவில் காவலாளி அஜித்குமார் உயிரிழப்பு!

## இறப்புச் சான்றிதழில் தகவல்!!

மானாமதுரை, ஜூலை.17–

சிவகங்கை மாவட்டம், மடப்புரம் கோயில் காவலாளி அஜித்குமார் திருப்புவனம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்ற போது வழியிலேயே உயிரிழந்தார் என திருப்புவனம் அரசு மருத்துவமனை வழங்கிய இறப்புச் சான்றிதழில் தெரிவிக்கப்பட்டது.A

மடப்புரம் பத்ரகாளியம்மன் கோயிலுக்கு வந்த பேராசிரியை நிகிதாவின் காரில் வைத்திருந்ததாகக் கூறப்படும் நகைகள் காணாமல் போனது தொடர்பாக, அந்தக் கோயில் காவலாளி அஜித்குமாரை மானாமதுரை தனிப் படை போலீஸார் கண்ணன், ராஜா, பிரபு, சங்கரமணிகண்டன், ஆனந்த் ஆகியோர் விசாரணைக்கு அழைத்துச்சென்றனர். விசாரணையின்போது, தனிப் படை போலீஸார் தாக்கியதில். அஜித்குமார் மயக்கமடைந்தார். இதையடுத்து, அஜித்குமாரைதனிப் படை போலீஸார் திருப்புவனம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர் கார்த்திகேயன் ஏற்கெனவே அவர் இறந்துவிட்டதாகத் தெரிவித்தார். இதன்பிறகு, அஜித்குமார் உடல் மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு, கூறாய்வு செய்யப்பட்டது.

இந்த நிலையில், இந்தச் சம்பம் நடந்து 18 நாள்களான பிறகும், அஜித்குமார் குடும்பத்தினருக்கு இறப்புச் சான்றிதழ், இறப்பு அறிக்கை வழங்கப்படவில்லை என சர்ச்சை எழுந்தது. இதையடுத்து, திருப்புவனம் அரசு மருத்துவமனை வழங்கிய அஜித்குமாரின் இறப்புச் சான்றிதழ், திருப்புவனம் காவல் நிலையத்தில்தயார்செய்யப்பட்ட இறப்பு அறிக்கையை சிவகங்கை மாவட்ட நிர்வாகம் வெளியிட்டது.

திருப்புவனம் அரசு மருத்துவமனை வழங்கிய இறப்புச் சான்றிதழில், தனிப்படை போலீஸாரால் தாக்கப்பட்ட அஜித்குமார் திருப்புவனம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்ற போது வழியிலேயே உயிரிழந்தார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கோயில்காவலாளி அஜித்குமார் அடித்துக் கொலை செய்யப்பட்ட வழக்கில் கைதுசெய்யப்பட்டுமதுரை சிறையில் அடைக்கப்பட்டுள்ள தனிப்படை போலீஸார் கண்ணன், ராஜா, பிரபு, சங்கரமணிகண்டன், ஆனந்த் ஆகிய 5 பேரையும் காவலில் எடுத்து விசாரிக்க சிபிஐ அதிகாரிகள் முடிவு செய்துள்ளதாகவும், இதற்காக திருப்புவனம் குற்றவியல் நீதிமன்றத்தில் சிபிஐ தரப்பிலிருந்து மனு தாக்கல் செய்யப்பட உள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.



ஓரணியில் தமிழ்நாடு:

# தி.மு.க.வில் 1.35 கோடி உறுப்பினர்கள் சேர்க்கை!

## தி.மு.க. தரப்பில் தகவல்!!

சென்னை, ஜூலை. 17

'ஓரணியில் தமிழ்நாடு' உறுப்பினர் சேர்ப்பு இயக்கம் மூலம் தமிழகம் முழுவதும் 1 கோடியே 35 லட்சத்து 43,103 பேர் இணைந்துள்ளதாக திமுக தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஜூன் மாதம் மதுரையில் நடைபெற்ற தி.மு.க. , 'ஓரணியில் தமிழ்நாடு' முன்னெடுப்பை முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார். அப்போது அவர் வாக்குச்சாவடிக்கு 30 சதவீதம் உறுப்பினர்களைதி.மு.க.வில் சேர்க்க நிர்வாகிகளுக்கு அறிவுறுத்தினார். தொடர்ந்து, இதற்காக செயலியும் உருவாக்கப்பட்டது. அதன்பின், ஜூலை 1–ஆம் தேதி இத்திட்டத்தை அறிவித்த முதல்வர் ஸ்டாலின், ஜூலை 3–ஆம் தேதி சென்னை, ஆழ்வார்பேட்டையில் மக்களை நேரடியாக சந்தித்து தொடங்கிவைத்தார். தொடர்ந்து, கடந்த ஜூலை 10–ஆம் தேதி திருவாரூர் தொகுதிக்குட்பட்ட சன்னதி தெருவில் முதல்வர், மக்களை நேரடியாக சந்தித்து, இத்திட்டத்தில் உறுப்பினர்களை சேர்த்தார். இதையடுத்து, கடந்த 12–ஆம் தேதி சென்னையில் தி.மு.க. தலைமை அலுவலகத்தில் தகவல் தொழில்நுட்ப அணியால் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு அறையை முதல்வர் திறந்து வைத்தார். அதன் தொடர்ச்சியாக மயிலாடுதுறை மாவட்டத்துக்குச்சென்றை முதல்வர் ஸ்டாலின், நேற்று மன்னம்பந்தல் ஊராட்சி, அம்பேத்கர் தெருவில் மக்களை நேரடியாக சந்தித்து உறுப்பினர்களைச் சேர்த்தார்.

இந்நிகழ்வின்போது, அமைச்சர்கள் கே.என்.நேரு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், சிவ.வீ.மெய்யநாதன், மாவட்ட செயலாளர் நிவேதா எம். முருகன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர். முதல்வர் ஸ்டாலின் அழைப்பை ஏற்று இதுவரை 1 கோடியே 35 லட்சத்து 43,103 பேர் திமுக உறுப்பினர்களாக இணைந்துள்ளதாக தி.மு.க. தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


கனம் உட்கோட்ட நடுவர்
மற்றும் வருவாய் கோட்டாட்சியர்
சங்ககிரி. சி.ப. 330 / 2025

நாகப்பன்(43), த/பெ.அர்த்தனாரி,
377/392, கள்ளுக்கடை திட்டு,
இடங்கணசாலை கிராமம்,
சங்ககிரி வட்டம்,
சேலம் மாவட்டம். ...மனுதாரர்
/எதிராக/
ஆணையாளர்,
இடங்கணசாலை நகராட்சி.
...எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் தனது அத்தை கணவர் ரங்கசாமி செட்டியார், த/பெ.பெருமாள் செட்டியார் கடந்த 28.03.1981 -ம் தேதியன்று சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், இடங்கணசாலை கிராமத்தில் உள்ள அவருடைய வீட்டில் இறந்ததை எதிர் மனுதாரரின் அலுவலகத்தில் பதிவு செய்ய உத்திரவிட கோரி மனு தாக்கல் செய்துள்ளார். இந்த மனு மீது எவருக்காவது ஆட்சேபனைகள் இருந்தால், இவ்விளம்பரம் செய்த 15 தினங்களுக்குள்ளாக மேற்படி கோட்டாட்சியர் அலுவலகத்தில் நேரில் ஆஜராகி எழுத்து மூலம் தெரிவித்து கொள்ள வேண்டியது. தவறும் பட்சத்தில் மேற்படி மனு ஒரு தலைபட்சமாக தீர்மானிக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை அறியவும்.

/நீதிமன்ற உத்தரவுப்படி/
V.வைத்திலிங்கமூர்த்தி,L.L.B.,
வழக்கறிஞர், சங்ககிரி.



கனம் உட்கோட்ட நடுவர்
மற்றும் வருவாய் கோட்டாட்சியர்
சங்ககிரி. சி.ப. 329 / 2025

நாகப்பன்(43), த/பெ.அர்த்தனாரி,
377/392, கள்ளுக்கடை திட்டு,
இடங்கணசாலை கிராமம்,
சங்ககிரி வட்டம்,
சேலம் மாவட்டம். ...மனுதாரர்
/எதிராக/
ஆணையாளர்,
இடங்கணசாலை நகராட்சி.
...எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் தனது அத்தை ருக்குமணி, க / பெ. ரங்கசாமி செட்டியார் 24.12.1992-ல் சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், இடங்கணசாலை கிராமத்தில் உள்ள அவருடைய வீட்டில்



பொது அறிவிப்பு

எமது கட்சிக்காரரான நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம் வட்டம், குமாரபாளையம், கல்லாங்காட்டுவலசு அஞ்சல், கதவு எண்.3/223ல் வசிக்கும் கே.எஸ்.சீனிவாசன் மனைவி ஏ.ரதி என்பவர் கடந்த 2006ம் ஆண்டு 174ம் எண்ணாகபதிவுசெய்யப்பட்டு, அண்ணாமலை பைனான்ஸ் நிதி நிறுவனத்தை 11 நபர்கள் கூட்டாக சேர்ந்து ஆரம்பித்து நடத்தி வந்து, கடந்த 25.06.2016ம் தேதியன்று

நகர்ப்புறம் மற்றும் ஊரக உள்ளாட்சிகளில் நியமன அடிப்படையில் மாற்றுத் திறனாளிகளை உறுப்பினர்களாக நியமிக்கும் சட்டத் திருத்த மசோதா பேரவையில் நிறைவேற்றப்பட்டது. இந்த மசோதாவுக்கு ஆளுநர் ஆர்.என்.ரவியும் ஒப்புதல் அளித்தார். அதன்படி, ஊரக உள்ளாட்சிகளில் 2,984 மாற்றுத் திறனாளிகளும், 650 பேர் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் நியமனம் செய்யப்படவுள்ளனர். இதன் மூலம், 13 ஆயிரத்து 357 மாற்றுத் திறனாளிகள் உள்ளாட்சி அமைப்புகளில் உறுப்பினர்களாக நியமனம் செய்யப்படவுள்ளனர்.

உள்ளாட்சி அமைப்புகளில் நியமனப் பதவிகளைப் பெற மாற்றுத் திறனாளிகள் அதிகளவில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

அதிலும் குறிப்பாக சென்னை போன்ற மாநகரங்களைச் சேர்ந்த நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத் திறனாளிகள் அதிகளவில் விண்ணப்பித்து ஆனால், புதிதாக உருவாக்கப்பட்ட சில மாவட்டங்களைச் சேர்ந்த நகர்ப்புற, ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் நியமனப் பதவிக்கு விண்ணப்பிக்க ஜூலை மாதம் இறுதி வரை அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்கள் அனைத்தும் பரிசீலிக்கப்பட்டு, ஓரிரு மாதங்களில் நியமன பதவிகளில் மாற்றுத் திறனாளிகள் அமர வைக்கப்படுவர் என்று தெரிவித்தனர்.



சேலம் மாவட்டம் வாழப்பாடி அருகே சோமம்பட்டியில் 15–வது நிதிக்குழு மானிய திட்டத்தின்கீழ் ரூ.50 லட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலையம் அமைக்க பூமி பூஜை நடைபெற்றது. தெற்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர் மாது என்கின்ற மாதேஸ்வரன் கட்டுமான பணியை துவக்கி வைத்தார். இதில் ஊராட்சி செயலாளர் மகேஸ்வரன் , தி.மு.க. கட்சி நிர்வாகிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# சட்டவிரோத மணல் விற்பனையால் ரூ.25,000 கோடி இழப்பு ஏற்படுகிறது!

## நடவடிக்கை எடுக்க லாரி உரிமையாளர்கள் கோரிக்கை!!

சென்னை, ஜூலை. 17 சட்டவிரோத மணல் விற்பனையால் அரசுக்கு ரூ.25 ஆயிரம் கோடி இழப்பு ஏற்படும் விவகாரத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழ்நாடு மணல் லாரி உரிமையாளர் சம்மேளனம் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக கிண்டியில் உள்ள சுரங்கத்துறை இயக்குநரிடம் சம்மேளனத்தின் தலைவர் செல்ல. ராசாமணி அளித்த மனுவில் கூறியிருப்பதாவது:

திருவள்ளூர், செங்கல்பட்டு, நாகப்பட்டினம், கரூர், மயிலாடுதுறை, கடலூர் ஆகிய மாவட்டங்களில் சட்ட விரோத குவாரிகள் செயல்படுகின்றன.

இங்கு லாரிகளில் அதிக பாரத்தை ஏற்றி விடுகின்றனர். மேலும் குறைந்த தூரத்தில் இறக்க வேண்டிய மணலுக்கு அதிகதூரத்தைகுறிப்பிட்டு முறைகேட்டில் ஈடுபடுகின்றனர். ஒரு ஆன்லைன் நடைச்சீட்டை பயன்படுத்தி பல முறை பயணிக்க அனுமதித்து அரசுக்கு கோடிக் கணக்கான ரூபாய் இழப்பை ஏற்படுத்துகின்றனர்.

இதற்கிடையே ஒரு நபர் குவாரிகளில் ராயல்டி செய்யும் ஒப்பந்தத்தை அரசிடம் இருந்து பெற்றதாகக் கூறி, உரிமையாளர்களை அச்சுறுத்தி ஒரு யூனிட்டுக்கு ரூ.700 வசூலிக்கிறார்.

குவாரிகளில் சவுடுமண் எடுத்துச் செல்லும் லாரிகளுக்கு ஜிஎஸ்டி, விற்பனை வரி ரசீது கொடுக்காமல் நடைச்சீட்டு மட்டுமே கொடுக்கின்றனர். இவ்வாறு செய்வதால் அரசுக்கு ஆண்டுக்கு ரூ.25 ஆயிரம் கோடி இழப்பு ஏற்படுகிறது.

மக்களுக்கு சரியான விலையில் மணல் கிடைப்பதில்லை.

இந்த விவகாரத்தில் பல முறை புகாரளித்தும் நடவடிக்கை இல்லை. தொடர்ந்து நடவடிக்கை எடுக்கத் தவறும் பட்சத்தில் அரசுக்கு ஏற்பட்ட இழப்பை தவறிழைத்த அதிகாரிகளிடம் இருந்தே வசூலிக்கக் கோரி உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்வோம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



ஆத்தூர் அருகே நரசிங்கபுரம் நகராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் முகாம் நடைபெற்றது. இந்த முகாமில் அனைத்து அரசு துறை அதிகாரிகளும் கலந்துகண்டு மனுக்களை பெற்றனர். ஆத்தூர் தாசில்தார் பாலாஜி நரசிங்கபுரம் நகராட்சி ஆணையாளர் ஜிவிதா நகர செயலாளர் வேல்முருகன் நகர மன்ற தலைவர் அலெக்சாண்டர் துணைத்தலைவர் தர்மராஜ் நகர துணை செயலாளர் பிரகாஷ் வார்டு செயலாளர் அசோகன் மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# புதிய வருமானவரி மசோதா மீதான 285 பரிந்துரை அறிக்கை சமர்ப்பிப்பு!

## 21–ம் தேதி பாராளுமன்றத்தில் தேர்வுக்குழு தாக்கல் செய்கிறது!!

புதுடெல்லி, ஜூலை.17– மக்களவையில் அறிமுகம் செய்யப்பட்ட புதிய வருமான வரி மசோதா மீதான 285 பரிந்துரைகளுடன் கூடிய தனது அறிக்கையை நாடாளுமன்ற தேர்வுக் குழு இறுதி செய்து ஏற்றது.

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடரின் முதல் நாளான திங்கள்கிழமை (ஜூலை 21) தனது அறிக்கையை தேர்வுக் குழு மக்களவையில் தாக்கல் செய்ய உள்ளது. தற்போது நடைமுறையில் உள்ள 1961ஆம் ஆண்டு வருமான வரிச் சட்டத்தை எளிமைப்படுத்தும் வகையில் புதிய வருமான வரிச் சட்ட மசோதாவை மத்திய அரசு கொண்டுவந்தது. 'வருமான வரிச் சட்ட மசோதா 2025' என்ற பெயரிலான அந்த மசோதாவை எதிர்க்கட்சியினரின் கடும் எதிர்ப்புக்கு இடையே, மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் கடந்த பிப்ரவரி 13ஆம் தேதி அறிமுகம் செய்தார்.

நடைமுறையில் வருமான வரிச் சட்டத்தில் இடம்பெற்றுள்ள 'மதிப்பீட்டு ஆண்டு', 'முந்தைய ஆண்டு' என்ற சொற்றொடர்கள் கைவிடப்பட்டு, எளிதில் புரிந்துகொள்ளக் கூடிய வகையில் 'வரி ஆண்டு' என மசோதாவில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், நீளமான வாக்கியங்கள், எளிதாக படித்து புரிந்துக்கொள்ளக் கூடிய வகையில் சிறிய வாக்கியங்களாக மாற்றப்பட்டுள்ளன. தற்போதைய சட்டத்தில் உள்ள 47 அத்தியாயங்கள், மசோதாவில் 23ஆக குறைக்கப்பட்டுள்ளன. வருமான வரியைக் கணக்கிடும் நடைமுறையை வரி செலுத்துவோர் புரிந்துகொள்ள தற்போதுள்ள சட்டத்தில் 18 அட்டவணைகள் இடம்பெற்றுள்ள நிலையில், எளிதில் புரிந்துகொள்ள வசதியாக 57 அட்டவணைகளாக விரிவுபடுத்தப்பட்டுள்ளன. தற்போதைய சட்டத்தில் இடம்பெற்றுள்ள 1,200 விதிகள், 900 விளக்கங்கள் நீக்கப்பட்டுள்ளன.

இந்த மசோதாவை மக்களவையில் அறிமுகம் செய்தவுடன், அதை மக்களவைத் தேர்வுக் குழுவின் ஆய்வுக்கு பரிந்துரைக்குமாறு அவைத் தலைவரை நிர்மலா சீதாராமன் கேட்டுக்கொண்டார்.

அதனடிப்படையில், பாஜக எம்.பி. வைஜயந்த் ஜெய் பாண்டா தலைமையில் 31 பேர் கொண்ட தேர்வுக் குழுவை அவைத்தலைவர் ஓம் பிர்லா அமைத்தார். இந்தக் குழு, பல்வேறு தரப்பினரிடமிருந்து கருத்துகள் மற்றும் ஆலோசனைகளைப் பெற்று தனது அறிக்கையை தற்போது இறுதி செய்துள்ளது. இது குறித்து தேர்வுக் குழுவில் இடம்பெற்றுள்ள உறுப்பினர் ஒருவர் கூறுகையில், 'புதிய வருமான வரி மசோதா மீதான அறிக்கையை தேர்வுக் குழு இறுதி செய்து, அதை ஏற்றுக்கொண்டுள்ளது. இந்த அறிக்கையில், மசோதாவில் மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றங்கள் தொடர்பாக 285 பரிந்துரைகள் அளிக்கப்பட்டுள்ளன. இந்த அறிக்கை, நாடாளுமன்ற மழைக்காலகூட்டத்தொடரின் முதல்நாளான திங்கள்கிழமை (ஜூலை 21) மக்களவையில் சமர்ப்பிக்கப்படும். இந்த மசோதா மழைக்கால கூட்டத்தொடரிலேயே மக்களவையில் நிறைவேற்றப்படவும் வாய்ப்புள்ளது' என்றார். தேர்வுக் குழு தனது அறிக்கையை மக்களவையில் தாக்கல் செய்ததும், அதில் அளிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை மத்திய அரசு ஆராய்ந்து தேவையான மாற்றங்களை மசோதாவில் மேற்கொள்ளும். பின்னர், மத்திய அமைச்சரவையின் ஒப்புதலைப் பெற்று மக்களவையில் மீண்டும் தாக்கல் செய்யப்படும். மக்களவையில் அதன் மீது விவாதம் நடத்தப்பட்டு, பின்னர் மசோதா நிறைவேற்றப்படும். இந்த மசோதா சட்டமாக இயற்றப்பட்டவுடன், கடந்த 1962ஆம் ஆண்டு ஏப்ரல் 1ஆம் தேதி முதல் நடைமுறையில் இருந்து வரும் 1961ஆம் ஆண்டு வருமான வரிச் சட்டம் மாற்றப்பட்டு, புதிய 'வருமான வரிச் சட்டம் 2025' நடைமுறைக்கு வந்துவிடும். புதிய வருமான வரிச் சட்டத்தை அடுத்த ஆண்டு (2026) ஏப்ரல் 1ஆம் தேதி முதல் நடைமுறைக்குக் கொண்டுவர மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

1961ஆம் ஆண்டு வருமான வரிச் சட்டத்தில் இதுவரை பல்வேறு பிரிவுகளில் 65 முறை 4,000க்கும் அதிகமான திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.


இறந்ததை எதிர் மனுதாரர் அலுவலகத்தில் பதிவு செய்ய உத்திரவிட கோரி மனு தாக்கல் செய்துள்ளார். இந்த மனு மீது எவருக்காவது ஆட்சேபனைகள் இருந்தால், இவ்விளம்பரம் செய்த 15 தினங்களுக்குள்ளாக மேற்படி கோட்டாட்சியர் அலுவலகத்தில் நேரில் ஆஜராகி எழுத்து மூலம் தெரிவித்து கொள்ள வேண்டியது. தவறும் பட்சத்தில் மேற்படி மனு ஒரு தலைபட்சமாக தீர்மானிக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை அறியவும்.

/நீதிமன்ற உத்தரவுப்படி/
V.வைத்திலிங்கமூர்த்தி,L.L.B.,
வழக்கறிஞர், சங்ககிரி.

அண்ணாமலை பைனான்ஸ் கூட்டு வியாபார விலகல் பத்திரம் மூலம் நான்கு நபர்கள் விலகிய பின்னிட்டு மீதம் உள்ள 7 பேர் மட்டும் அண்ணாமலை பைனான்ஸ் நடத்தி வந்த நிலையில், எமது கட்சிக்காரர் உடல்நலம் காரணமாகவும், நிதிநெருக்கடி காரணமாகவும், மற்றும் குடும்ப மன உளைச்சல் காரணமாகவும், எமது கட்சிக்காரரின் சொந்த விருப்பத்தின் பேரில் கடந்த 08.07.2025ம் தேதி முதல் அண்ணாமலை பைனான்ஸ் நிதிநிறுவனத்தின் பங்குதாரர் என்ற நிலையிலிருந்து விலகிக் கொண்டுள்ளார் என்பதை இதன் மூலம் தெரிவிக்கிறார். இனிமேற்கொண்டு மேற்பட்ட நிதி நிறுவனம் சம்பந்தமாக எமது கட்சிக்காரரை அணுக வேண்டாம் என்றும், எந்த ஒரு சிவில் கிரிமினல் வழக்குகளுக்கும், எனது கட்சிக்காரரின் பெயரை பயன்படுத்த வேண்டாம் என்றும் இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

S.UDHAYAKUMAR M.B.A., LL.B.,
ADVOCATE, KOMARAPALAYAM.

**தனேஜா ஏரோஸ்பேஸ் அண்ட் ஏவியேஷன் லிமிடெட்**

பதிவு அலுவலகம் : பேலகொண்டபள்ளி கிராமம், தளி ரோடு, தேன்கனிக்கோட்டை, பேலகொண்டபள்ளி - 635 114, (தமிழ்நாடு)
போன் / பேக்ஸ் : 04347-233507, E-mail : secretarial@taal.co.in,
Website : www.taal.co.in, CIN : L62200TZ1988PLC014460

**வீடியோ கான்பரன்சிங் (VC)/ மற்ற ஆடியோ வீஷுவல் மீன்ஸ் (OAVM) முலம் நடத்தப்படும் 36ஆம் ஆண்டு பொதுக்கூட்ட அறிவிப்பு**

தனேஜா ஏரோஸ்பேஸ் அண்ட் ஏவியேஷன் லிமிடெட்டின் 36வது வருடாந்திர பொதுக்கூட்டம் (AGM) ஆகஸ்ட் 12, 2025, செவ்வாய்க்கிழமை அன்று மதியம் 12.00 மணிக்கு (இந்திய நேரப்படி) பங்குதாரர் வருடாந்திர பொதுக்கூட்டத்தை கூட்டுவதற்காக அனுப்பப்பபட்ட அறிவிப்பில் (Notice) இடம்பெற்றுள்ள விஷயங்களை கருத வீடியோ கான்பரன்சிங் (VC) ஆடியோ வீஷுவல் மீன்ஸ் (OAVM) எனும் மின்னணு நுட்பங்களின் வாயிலாக நடைபெறும்.

நிறுவன விவகார அமைச்சகத்தின் 8 ஏப்ரல் 2020, 13 ஏப்ரல் 2020, 13 ஜனவரி 2021, 5 மே 2022, 28 டிசம்பர் 2022, 9 செப்டம்பர் 2023 மற்றும் 19 செப்டம்பர் 2024 ஆகிய தேதிகளில் வெளியான பொதுச் சுற்றறிக்கை எண்கள். 14/2020, 17/2020, 2/2021, 2/2022,10/2022, 09/2023 மற்றும் 09/2024 (ஒட்டுமொத்தமாக 'MCA சுற்றறிக்கைகள்' எனப்படுகிறது) மற்றும் சுற்றறிக்கை எண். SEBI/HO/CFD/CMD1/CIR/P/2020/79 தேதி 12 மே 2020 உடன் படிக்கப்படும் SEBI/HO/CFD/CMD2/CIR/P/2021/11 தேதி 15 ஜனவரி 2021, SEBI/HO/CFD/CMD2/CIR/P/2022/62 தேதி 13 மே 2022, SEBI/HO/CFD/PoD-2/P/CIR/2023/4 தேதி 5 ஜனவரி 2023, SEBI/HO/CFD/CFD-PoD-2/P/CIR/2023/167 தேதி 7 அக்டோபர் 2023 மற்றும் SEBI/HO/CFD/CFD-PoD-2/P/CIR/2024/133 தேதி 3 அக்டோபர் 2024 வகையில் ஒரு பொதுவான இடத்தில் உறுப்பினவர்களின் இருப்பு இல்லாமல் 2020, 2021, 2022, 2023, 2024, செப்டம்பர் 30, 2025 வரை ஆண்டுகளுக்கான வருடாந்திர பொதுக்கூட்டங்கள் வீடியோ கான்பன்சிங்(VC)/ ஆடியோ வீஷுவல் மீன்ஸ் OAVM) முறையில் கூட்டப்பட்டது. நிறுவனங்கள் சட்டம் 2013 மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகள் மற்றும் செபி (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் விதிமுறைகள்) 2015 ஆகியவற்றின் பொருந்தக்கூடிய விதிகளுக்கு இணங்க, சுற்றறிக்கைகள் மற்றும் சுற்றறிக்கைகளின் படி நிறுவனத்தின் 36வது வருடாந்திர பொதுக்கூட்டம் VC / OAVM மூலம் உறுப்பினர்களின் இருப்பு இல்லாமல் கூட்டப்படவுள்ளது.

மேலே உள்ள சுற்றறிக்கைகளுக்கு இணங்க 2024-25 நிதியாண்டிற்கான வருடாந்திர அறிக்கையுடன் 36வது பொதுக்குழுவின் அறிவிப்பும், நிறுவனம் / டெபாசிட்டரிகள் / பதிவாளர் மற்றும் பரிமாற்ற முகவர், அதாவது பிக்ஷேர் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் ஆகியவற்றில் மின்னஞ்சல் முகவரிகள் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு மின்னணு முறையில் அனுப்பபடும். உறுப்பினர்கள் VC/OVAM வசதி மூலம் பொதுக்குழுவில் பங்கேற்கலாம்.

அறிவிப்பு மற்றும் வருடாந்திர அறிக்கை நிறுவனத்தின் இணைய தளமான www.taal.co.in மற்றும் மும்பை பங்கு சந்தையின் இணையதளம் www.bseindia.com மேலும் NSDLஇன் evotingindia.nsdl.com இணையதளத்திலும் கிடைக்கும். பொதுக்குழுக் கூட்டத்தின் போது தொலைமின் வாக்களிப்பு மற்றும் மின்னணு வாக்குப்பதிவை எளிதாக்குவதற்கு NSDL உடன் நிறுவனத்தால் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள் மற்றும் நிறுவனம் / டெபாசிட்டரிகளில் தங்கள் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்யாதவர்கள் தங்கள் மின்னஞ்சல் முகவரிகளை நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவரான பிக்ஷேர் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்-ன் பதியப்பட்ட முகவரிகளுக்கு investor@bigshareonline.com அல்லது நிறுவனத்தின் secretarial@taal.co.in மூலம் பொதுக்கூட்ட அறிவிப்பு மற்றும் ஆண்டறிக்கையை பெறலாம்.

அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தீர்மானங்களின் மீது வாக்களிக்க அதன் அனைத்து உறுப்பினர்களுக்கும் தொலைதூர மின்னணு வாக்களிக்கும் வசதியை நிறுவனம் வழங்கும். மேலும் பொதுக்குழுக் கூட்டத்தில் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மூலம் வாக்களிப்பதற்கான விரிவான செயல்முறை அறிவிப்பில் வழங்கப்பட்டுள்ளது.

நிறுவன விவகாரங்கள் அமைச்சக MCA சுற்றறிக்கைகளுக்கு இணங்க நிறுவனத்தின் அனைத்து உறுப்பினர்களின் தகவல் மற்றும் நன்மைக்காக இந்த விளம்பரம் வெளியப்படுகிறது.

தனேஜா ஏரோஸ்பேஸ் அண்டு ஏவியேஷன் லிமிடெட்
அஸ்வினி நவரே
பூனே, 17 ஜூலை 2025 நிறுவன செயலாளர்